உ

கணபதி துணை.

தெய்வத்தன்மை விளங்கிய

குகைநமசிவாயதேவர்

அருளிச்செய்த

அருணகிரியந்தாதி.

சென்னை,

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

இதன்விலை அணா—1.

கணபதி துணை.

அருணகிரியந்தாதி.

காப்பு.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும்—காத்தி
அரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

நூல்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணுப்பெருமை
ஆர்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்—சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையாநீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால். (௧)

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட வியலனே—மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரித்
தேசிகனே நீகண்டாய் திக்கு. (௨)

இக்குவே றில்லை திருவுளமே யல்லாமல்
இக்குவே ளைக்காய்ந்த வீசனே—மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. (௩)

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா—மாசிலா
அண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணுமலை யாதகண் பார். (௪)

பாராம னீயிருந்தாற் பார்மீதி னாயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே—தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே சூழ்ந்த
இறப்பை யகற்றுதற்கு மின்று. (௫)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுநமி யேனை நெருக்காம—னன்றிதரும்
ஆரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைந்தக் கால். (௬)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
ஆல முகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (௭)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
என்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு. (௮)

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்டசோணகிரி வித்தகா—வாறுகொண்ட
செஞ்சடையாய்நின்னைத் தெரிசித்தல்வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (௯)

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்தீக் கண்ணும்
அரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து. (௧௦)

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டேதா—னாலங்
தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
எரித்தபிரான் வந்தா னிதென். (௧௧)

என்ன தவப்பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணாத முக்கண்ணா—நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரித் தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (கஉ)

பெற்றோரும் பலனைப் பிறந்ததனா னெஞ்சமே
அற்றோ மனத்தி லனவரதம்—பற்றுவார்
உள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக்கொண் டாட வரம். (கங)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து. (கச)

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
இருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (கரு)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரும்
என்புருக்கொள் பெண்ணா யிருக்குமே—யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (கசு)

பரமனரு ணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனக் கண்டோ—மருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
ஆட்டுத் தலையாகை யால். (கஎ)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சாலவெருண் டோடுஞ் சமயத்தி—லோலமென
நின்றா னுலகரிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ. (கஅ)

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ணன்
ஓடி வடவா லுறங்குமே—நாடுங்கால்
அக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். (கசு)

நகுமானே யேந்தருணே நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி லுயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது. (உ0)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணசலனை
ஓதக் கடனெஞ்சே யோதினுற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம். (உக)

ஆமென்று நம்பி யனுதினமும் போற்றினுல்
நாமென்று பற்றி நலமாகக்—காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (உஉ)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
ஐயரடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (உங)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட. (உச)

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
அடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்வீர் குலம். (உரு)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராளுநு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (உசு)

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவார்
ஆரும் பரவு மருணேசன்—சீரை
உறக்கத் திலுமறக்க வொண்ணா துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (உஎ)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
என்னறியேன் சோணகிரி யீசனே—நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து. (உஅ)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
எருத்தில்வருஞ் சோணகிரி யீசா—பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம நீயறுத்தாய் கண்டு. (உகூ)

கண்டுமினை யென்பார் கருத்துநா வும்வாழி
அண்டர்கோ வேயருணை யண்ணலே—விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாத்துமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம். (௩0)

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
அருமா மறைதேடு மண்ணல்—வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேசன்
இனிக்கூட்டான் றுன்பத் தெமை. (௩க)

எமையாளுஞ் சோணகிரி யீசாநின் பாகத்
துமையாளு நீயு முகந்த—சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
இருக்குங் கருணைசெய்வா யென்று. (௩உ)

என்றுமரு ணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில காலம்
இருந்தே னிராமலிருந் தேன். (௩௩)

ஏனமனந் தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு. (௩௪)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா—னொருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர். (௩௫)

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பில்
அயர்கின்ற நாயேற்கு மாமோ—வுயர்தவத்தோர்
ஆரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு. (௩௬)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
அப்பரிய சோணகிரி யப்பனே—யெப்பொழுதும்
பெண்ணைவிட்டு நீங்காநின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (௩௭)

காணா ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணுமற் றுன்காண நாடியே—சேணுடர்
ஆயும் புகழருணை யண்ணா மலையானே
மாயுந் தமியேன் மனம். (௩௮)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா—னனத்தனருள்
தக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (௩௯)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
உம்பர்கோ னன்றுரைத்த வுண்மையை—நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடாதெம்மை
எடுத்தாலுஞ் சோணேச னென்று. (௪0)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தநாள்
இன்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரும்
ஏகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம். (௪க)

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்று ளடியே—யேகாந்த
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடுத்து. (௪உ)

எடுத்த பயனை யிருவினையை யெண்ணார்
அடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
அறியாத மானுடவ ரச்சு. (௪௩)

அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். (௪௪)

தானே புலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதைதாய்—தானே
அனைத்துயிருங் காக்கு மருணேச னென்றூன்
மனத்துயரம் போவதே மாண்டு. (௪௫)

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டினு—வீண்டுலகில்
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச ரென்றொருக்காற் சொல். (௪௬)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
னில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடிக் தாமரையை
நெஞ்சே மறவாம னீ. (சஎ)

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்—றூயகமாம்
அண்ணா மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணா மலையகற்றும் போது. (சஅ)

போதுமதி சூடும் புனிதர் புவியீன்ற
மாதுபங்க ரண்ணா மலைநாதர்—பாதம்
இறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (சகூ)

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலில்
ஏற்றிருக்கு மாயவன்கணெப்பொழுதுஞ்—சாற்றுகையில்
அம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணா மலைநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு. (ருо)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
அப்பனே நன்னா லறிந்தாலு—மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று. (ருக)

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ—யுற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (ருஉ)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்—செறிவுண்டாம்
ஆதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
ஓதிமட நெஞ்சமே யுன். (ருங)

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசனிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து. (௫௪)

உயர்ந்தவர்க்கு ளெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா—பயந்தமரர்
உண்ணப்ப டாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென். (௫௫)

என்ன செனன மெடுத்தார் புவிமீதில்
அன்னமிடா ரின்சொல் லறிகிலார்—முன்னமே
ஒன்னார் புரமெரித்த வுண்ணா முலைபாக
என்னார் திருநீ றிடார். (௫௬)

நீறிடே னஞ்செழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக்—காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம். (௫௭)

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வெண்ணாத பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
இறப்பிற்கு மீடாயி னேன். (௫௮)

எனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானொறுப்பாய் சோணகிரித் தாணுவா—மானுகந்த
எந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல். (௫௯)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்—விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான். (௬௦)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்—தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
அப்பனே நீயேறு மான். (சுக)

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றூடுகிலென்
தானம் பதினாறுந் தான்செயினென்—னனங்கள்
அஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண்ணாத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று. (சுஉ)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்—வென்றிதரும்
அம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (சுங)

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாதம்
அம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மால்
இருந்துகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே
பொருந்த நினையாத போது. (சுச)

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்—றூதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
இருப்பா னருணேச னின்று. (சுரு)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயரம்
என்றைக்குப் போமருணை யீசனே—கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியாய்
என்னை நெருக்கு மிவை. (சுசு)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
இருக்கும் பலபிணிநோ யெல்லா—முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (சுஎ)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று—மறைபுகுந்தேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (கூஅ)

வேலைவிட முண்ட விமலருணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை—மேலமரர்
பண்ணினார் பூசையறம் பண்ணிப் பரகதியில்
நண்ணினா ரெல்லா நலம். (கூகூ)

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோணேச—ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம். (எ௦)

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார்—தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார். (எக)

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
அஞ்சலென்ற சோணகிரி யண்ணலே—நெஞ்சறிய
ஆண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கனைத்த மண். (எஉ)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே—விண்ணப்பம்
ஒன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
என்று தருவா யெனக்கு. (எங)

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்னா—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
என்னைப் பொருளா வெடுத்து. (எச)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்—விடப்பானம்
பண்ணியநேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது. (எரு)

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
எப்போதுந் தள்ளா திரங்கியே—முப்போதும்
பூசிப்ப தென்னாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தென்னா ணினைந்து. (எசு)

நினையேன் றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்—புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றியருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர். (எஎ)

பேராயிரமுடைய பெம்மானைச் சோணகிரி
ஆரா வமுதை யறியாமல்—வாராது
தீது நலமுந் தெரியுங்கா ணெஞ்சமே
ஏதுமவ னென்றே யிரு. (எஅ)

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றோ
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
எம்பிரா னோரஞ்செழுத்து. (எகூ)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றுஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
இன்றறுப்பான் சோணேச னென்று. (அ0)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனுர்க்—கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (அக)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியைவாழ்த்துநர்க்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு—முத்திதரு
மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு. (அஉ)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (அங)

கங்கா தரனே கடையேனை யெந்தநாள்
அங்கா தரவா வழைக்குநா—ணங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு. (அச)

செப்பரிய வாணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே—னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு. (அரு)

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கும்
அண்டர்கோ வேயருணை யண்ணலே—தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்றும்
அடையா தெழுபிறப்பா மல். (அசு)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலும்
நல்லதென்று நெஞ்சகத்தி னாடேன்யான்—சொல்லரிய
அண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
துண்ணா முலையாளை யும். (அஎ)

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா—லிம்மையிலே
எல்லாருங் காண வெளிதோ புவிமீதில்
நல்லார் துதிக்கு நடம். (அஅ)

கடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லார்
உடலையொறுத் தாலாவ துண்டோ—வடலைநூல்
ஓதினுற் பாசமொழியுமோ புற்றிலே
மோதினுற் பாம்புசா மோ. (அகூ)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
ருகமறே னின்பெருமை தானறியேன்—காகநாய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியில்
நம்மதென்னுங் கண்டாய் நரி. (கூ0)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தேன்
அரிக்கு மரிதா மரனே—தெரிக்குமறை
காணுத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணுத நாயேன் பிறந்து. (கூக)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடேன்
அறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திறவா
உம்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் ருன். (கூ௨)

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே—யேனம்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்ததென்ன நீர். (கூக௩)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே—பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (கூச)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
அன்னந் தருமருணை யையரே—யென்னை
எடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர். (கூரு)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறப்பை
ஆர்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற்—பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
ஐயா கருணாலயா. (கூசு)

கருணாலயாநின் கழல்பணிய மாட்டேன்
அருணா சலாவென் றழையேன்—மரணந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து. (கூஎ)

குறியே னிருபதத்தைக் கூறும் வனகசற்
றறியே னறிந்தவர்க்கொன் றாற்றேன்—சிறியேனின்
றாயுமறை தேடரிய வண்ணா மலையானே
மாயுமிருந் தையா மனம். (கூஅ)

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
என்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கும்
உன்னிச்சை யன்றோ உரை. (கூகூ)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை—நிரைக்குமே
எண்ணார் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணா ரமுதமெனுங் கார். (க00)

அருணகிரியந்தாதி முற்றுப்பெற்றது.

☞ இவ்வந்தாதி, மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவஸ்தலயாத்திரை செய்துவருகிறேனென்று தமது குருவினனு மதிபெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தமது குருவுருவாக வெழுந்தருளிய அண்ணாமலையார் சொற்படி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்த கன்னடமூர்த்தி யாகிய குகை நமசிவாய தேவர் அவ்வண்ணாமலையார் வரப்பிரசாதத்தினாலே அவரைத் தோத்திரஞ் செய்தது.